சுருக்கம்

உயர்கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

உயர்கல்வித் (ஜி1) துறை

அரசாணை (நிலை ) எண்: 230 நாள் 20 .7.2006

படிக்கப்பட்டவை:

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண் 7152/ C1/2006
நாள் 12.6.2006

-----

ஆணை:

அரசு கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கான கட்டணம் மிகவும் அதிகமாக இருப்பதால் ஏழை எளிய மாணவர்கள் அக்கட்டணத்தை செலுத்தி அப்பாடப்பிரிவுகளில் படிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகவும், எனவே அப்பாடப்பிரிவுகளை அரசு சார்பில் நடத்தப்படும் முறையான பாடப்பிரிவுகளாக மாற்றும்படி அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன. இதனடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் கருத்துரு கோரப்பட்டது .

2. 51 அரசு கலைக் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு அதிகமுள்ள சுயநிதி பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், அந்தந்த கல்லூரி முதல்வர்களால் ரூ.4000/– சம்பளத்தில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர் என்றும், இப்பாடப்பிரிவுகளில் சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து பெறப்படும் கட்டணம் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை பொறுத்தும் மாறுபடுகிறது என்றும், அரசு கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் அக்கல்லூரி முதல்வரால் தனியாக பராமரிக்கப்படும் கணக்கில் பற்று வைக்கப்பட்டு கௌரவ விரிவுரையாளர்களுக்கான சம்பளம் அதிலிருந்து வழங்கப்படுகின்றன என்றும், சுயநிதி பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால் புதிதாக விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படவேண்டும் என்றும், மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், அரசு கலைக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்களின் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகின்றன என்றும், சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப் பிரிவுகளில் இக்கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து சுயநிதி பாடப் பிரிவுகளுக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கும் என்றும், எனவே இப்பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால், கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை மாணவர்களுக்கு திருப்பி அளிக்க வேண்டியிருக்கும் என்றும், மேலும் உடனடியாக விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படவேண்டும் என்றும், அரசுக்கு தெரிவித்து இப்பொருள் குறித்து கீழ்க் குறிப்பிட்டுள்ளவற்றிற்கு தெளிவுரை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசினைக் கேட்டுக்கொண்டார்.

i) சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை இக்கல்வி ஆண்டிற்கும் சுயநிதி அடிப்படையிலேயே நடத்தலாமா? அடுத்த கல்வியாண்டு முதல் இப்பாடப்பிரிவுகளை அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றலாமா ?

ii) இக்கல்வி ஆண்டிலேயே சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால் வசூலிக்கப்பட்ட கட்டணத்தை மாணவர்களுக்கு திரும்ப வழங்கலாமா ?

iii) இப்பாடப் பிரிவுகளுக்கு கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்யலாமா அல்லது நிரந்தர விரிவுரையாளர்களை நியமனம் செய்யலாமா ?

iv) இப்பாடப்பிரிவுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கு எத்தகைய கட்டணங்களை பின்பற்றுவது ?

v) இத்தகைய மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தை அரசு கணக்கில் செலுத்துவதா அல்லது இச்செலவினங்களை மேற்கொள்ள தனியாக பராமரிக்கப்படும் கணக்கில் செலுத்துவதா ?

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் மேற்கண்ட கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

i) அரசு கல்லூரிகளில் தற்போது சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் அனைத்து பாடப்பிரிவுகளும் இந்த கல்வி ஆண்டு முதல் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்படுகிறது.

ii) சுயநிதி பாடப்பிரிவு மாணவர்களிடமிருந்து கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் உடனடியாக திருப்பி வழங்க உத்தரவிடப்படுகிறது. இது இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் பொருந்தும்.

ii) தற்பொழுது நடைமுறையில் உள்ள 264 சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுவதால், அந்த வகுப்புகளை கையாளுவதற்கு தேவைப்படும் ஆசிரியர் பணியிடங்களுக்கு கௌரவ விரிவுரையாளர்களை அமர்த்தி கொள்ளவும், அவர்களுக்கான மாத ஊதியம் ரூ.4000/—அரசு நிதியிலிருந்து வழங்கப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. மேற்படி செலவினத்திற்காக ரூ.5,06,88,000/— (ரூபாய் ஐந்து கோடியே ஆறு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) வழங்க அரசு ஒப்புதலளித்து ஆணையிடுகிறது. இச்செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

“2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் –
103 அரசு கல்லூரிகளும் , கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில்
சேராதது – AZ ஆடவர் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள
சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக
மாற்றுதல் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை
கொடுத்தல் – 02 ஊதியம் (கு.தொ.கு. 2202 03 103 AZ 3320 )

"2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும் , கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில் சேராதது – BA மகளிர் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (து.தொ.கு 2202 03 103 BA 3329 )

5. இச்செலவினம் "**புதுப்பணித்திட்டமாக** " கருதப்படும். துணை மதிப்பீடுகளில் மேற்காணும் செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ–I ) துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதித் ( வ.செ.தி.பொ–I) துறைக்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண் 199/SS(KSG)/06 நாள் 20.7.2006–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்: 305 .

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்
அரசு செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் , சென்னை –6
அனைத்து மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்கள்
மாவட்ட கருவூல அலுவலர்கள் ,
சம்பளக்கணக்கு அலுவலர் சென்னை / மதுரை
நகல்
உயர்கல்வித் துறை சி, இ ,எப், ஹெச் மற்றும் கே, பிரிவுகள் , சென்னை –9
நிதித்துறை சென்னை –9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9
உயர்கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.